எம்.சி.ஓ.பி எண்: 4044 /2022 தேதி: 25.11.2025

மசா. : 1

பெயர் : மாணிக்கவள்ளி(இளவர்க்காக)

க /பெ. : சிவக்குமார்

வயது : 47

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 8 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. புகார் என் கணவர்கொடுத்தார். அவர் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. என் வீட்டிற்கும் விபத்து நடந்த இடத்திற்கும் இடையே சுமார் 1 கிலோமீட்டர் தூரம் இருக்கும். இந்த விபத்து யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்று என்னால் நேரடியாக கூறமுடியாது. விபத்து நடந்த உடன் ஸ்ரீதேவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். முதல் உதவி சிகிச்சை பெற்ற பிறகு ஆயிஷா மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார்கள். என் மகனுக்கு இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. முதல் உதவி சிகிச்சை பெற்ற உடனே அயிஷா மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார்கள். நான் தனியார் கம்பெனியில் வேலை பார்க்கிறேன். என்னுடைய சம்பளத்தை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் மகனை வீட்டில் வைத்து பார்த்ததால் வேலைக்கு செல்ல முடியவில்லை என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் மகன் தற்பொழுது 12ம் வகுப்பு படிக்கிறார். என் மகனுக்கு விபத்தினால் படிப்பில் எந்த தடையும் இல்லை என்றால் சரி. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய மகனின் அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.